(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 208/2017 அ.சா.12

Name : அழகர்ராஜா
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19.01.2023.

முதல் விசாரணை:-

நான் தற்போது போடி தாலுகா காவல்நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக நான் மதுரை மாவட்ட நாகமலை புதுக்கோட்டை காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 26.09.2014 அன்று இரவு 9 மணிக்கு ஆய்வாளர் உத்தரவின் பேரில் அடையாளம் தெரியாத ஆண் பிரேதத்தை கைப்பற்றி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின்படி மருத்துவரிடம் சேர்ப்பித்தேன். அலுவல் மருத்துவர் பிரேதத்தை பார்த்துவிட்டு சவக்கிடங்கில் வைத்திருக்க சொன்னார். பின்னர் மறுநாள் 27.09.2014 ம் தேதியன்று மதியம் 1 மணியளவில் இறந்தவரின் பிரேதத்தை பிரேதபரிசோதனைக்கு உட்படுத்த ஆய்வாளர் சொன்ன அறிவுறுத்தலின் பேரில் இறந்தவரின் உடலை மருத்துவரிடம் அடையாளம் காண்பித்தேன். பின்பு பிரேதபரிசோதனை முடிந்து இறந்து போனவரின் அக்கா கணவரிடம் பிரேதத்தை ஒப்படைத்து ஒப்புதல் கடிதம் பெற்றேன். நான் நீதித்துறை நடுவர் எண்.6 பிறப்பித்த உத்தரவுபடி இறந்தவரின் உடல்உள்உறுப்புகளை வட்டார தடயஅறிவியல் ஆய்வகம் மதுரை அலுவலகத்தில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

இந்த வழக்கு தொடர்பாக மூன்று நாட்கள் அலுவலக பணியை மேற்கொண்டேன். ஆய்வாளரிடம் கடவுச்சீட்டு பெற்று தான் என்னுடைய பணியை செய்தேன் என்றால் சரிதான்.கடவுச்சீட்டுகளை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். ஒவ்வொரு நாள் பணியை முடித்த பிறகு ஆய்வாளரிடம் கடவுச்சீட்டை ஒப்படைத்தேன். என்னை ஆய்வாளர் நிலையத்தில் வைத்து இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார். பொறுப்பு ஆய்வாளர் விசாரணை செய்ததால் அவருடைய பெயர் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 27.10.2014 அன்று சுமார் 10 நிமிடம் என்னை விசாரணை

செய்தார். அது காலையா, மாலையா என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி பணி எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

## (**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO**. 208/2017 அ.சா.13

Name : நாகமணி
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19.01.2023.

முதல் விசாரணை:-

நான் தற்போது ஒத்தக்கடை காவல்நிலையத்தில் பயிற்சி சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இத்றகு முன்பாக நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 21.11.2014 ம் தேதியன்று நாகமலைப் புதுக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.436/2014 ன்படி இதச பிரிவு 302 ன் கீழ் படிவம் 95 ல் கைப்பற்றப்பட்ட இரத்தம் படிந்த பட்டாக்கத்தி - 1, இரத்தம்படிந்த சுமார் 10 கிலோ எடையுள்ள கருங்கல் -1, இறந்து போன சாகுல்ஹமீது என்பவர் அணிந்திருந்த இரத்தம்படிந்த டீசர்ட், பேண்ட், இரத்தம்படாத ஒரு ஜோடி செருப்பு, இரத்தம்படிந்த சிறு சிறு துகள்களுடைய கற்கள், இரத்தம்படாத சிறு சிறு கற்கள் ஆகியவற்றை படிவம் 95 மூலமாக கைப்பற்றியதை நீதித்துறை நடுவர் உத்தரவுன்படி R.P.R.No.501/2014 ன்படி மதுரை தடயஅறிவியல் துறை அலுவலகத்தில் கடந்த 26.11.2014 ம் தேதியன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் தயார் செய்யப்பட்ட படிவம் 95 குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது. இந்த வழக்கு தொடர்பான பணிகளை நான் கடவுச்சீட்டு மூலமாக தான் செய்தேன். நான் பயன்படுத்திய கடவுச்சீட்டை வேலை முடிந்த பின்பு நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன். யார் என்று தற்போது ஞாபகமில்லை. எந்த தேதியில், எந்த நேரத்தில் நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு தொடர்பாக காவல்ஆய்வாளர் திரு.கணேசன் என்பவர் 28.12.2014 அன்று எந்த நேரத்தில் விசாரணை செய்தார்என்று தற்போது ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் பணிகள் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.